DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 32/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.7

Accused produced

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சுந்தரம் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 06th day of August, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது செட்டியார்பட்டி வருவாய் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.06.2024 ம் தேதி நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தபோது மதியம் சுமார் 2.15 மணிக்கு தளவாய்புரம் காவல் நிலைய ஆய்வாளர் என்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு அய்யனார் என்பவரை கொலை வழக்கு சம்பந்தமாக கைது செய்து வைத்திருப்பதாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகவும் அதற்கு சாட்சியாக இருக்குமாறும் என்னைக்கேட்டுக்கொண்டார்.

உடனே நானும் எனது கிராம உதவியாளர் கணேஷ் என்பவரும் தளவாய்புரம் காவல் நிலையம் சென்றோம். அன்று மதியம் 2.45 மணியளவில் எதிரி அய்யனார் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலை செய்ய பயன்படுத்திய கத்தியையும், சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த கைலி மற்றும் டீசர்ட்டையும் பட்டியூர் செல்லும் வழியில் உள்ள விலக்கில் ஒளித்து வைத்திருப்பதாகவும், தன்னை

அழைத்து சென்றால் அவற்றை எடுத்து ஆஜர் செய்வதாகவும் தெரிவித்தார்.

அதனடிப்படையில் சுமார் 3.45 மணிக்கு பட்டியூர் விலக்கு சென்றோம். அங்கிருந்த முட்புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த கத்தி, சம்பவத்தின் போது எதிரி அணிந்திருந்த கருப்பு கலரில் காலர் வைத்த இரத்தக்கறை படிந்த டீசர்ட், இரத்தக்கறை படிந்த சிவப்பு கலர் வேஷ்டி ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். எதிரி எடுத்து ஆஜர் செய்த மேற்படி சான்று பொருட்களை ஆய்வாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் நானும் கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். எதிரி எங்கள் முன்னிலையில் அளித்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 8** ஆகும். எதிரி எடுத்து ஆஜர் படுத்திய சான்று பொருட்களை கைப்பற்றியதற்கான **அத்தாட்சி அசாஆ 9** ஆகும். எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்ததாக எடுத்து ஆஜர் செய்த **இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் காலருடன் கூடிய டீசர்ட் –1 சா.பொ.2** ஆகும். சம்பவத்தின் போது எதிரி அணிந்திருந்த **இரத்தக்கறை படிந்த சிவப்பு கலர் வேஷ்டி சா.பொ.3** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் தளவாய்புரம் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் அரை கிலோமீட்டர் இருக்கும். நானும் கிராம உதவியாளரும் மதியம் 2.20 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் ஆய்வாளரும், ஒரு காவலரும் இருந்தனர். அப்போது எதிரி என்ன நிறத்தில் உடை அணிந்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் எதிரி காவல் நிலையத்திலேயே இல்லை என்றாலும், அதனால் தான் என்னால் உடையின் நிறம்குறித்து குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தினை மதியம் 2.25 மணிக்கு அளிக்க ஆரம்பித்தார். ஒபபுதல் வாக்குமூலத்தினை யார் பதிவு செய்தது

என்றால் எதிரி சொல்ல சொல்ல ஆய்வாளர் அதனை கேட்டு காவலரிடம் சொல்ல காவலர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரது குடும்பத்தினர் குறித்த விபரங்களை சொன்னாரா என்றால் சொல்லியுள்ளார். எதிரியின் அண்ணன் பெயர் சொன்னார் .தற்போது ஞாபகம் இல்லை. எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும், நானும் அந்த இடத்தில் இல்லை என்றாலும் எனவே தான் எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் குறித்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு நேரம் எடுக்கப்பட்டது என்றால் சுமார் 1 மணி நேரம் எடுக்கப்பட்டது. எத்தனை பக்கங்கள் என்றால் 4 பக்கங்கள். நான்கு பக்கங்களிலும் நான் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. ஒரு பக்கத்தில் தான் கையொப்பம் செய்தேன். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் 3.30 மணிக்கு கிளம்பினோம். நானும் காவல் ஆய்வாளரும் கிராம உதவியாளரும் காவலரும் ஒரே வண்டியில் சென்றோம். பட்டியூர் விலக்கிலிருந்து சான்று பொருட்களை கைப்பற்றிய முட்புதர் எவ்வளவு தூரம் இருக்கிறது என்றால் 100 மீ தூரம் இருக்கும். சான்று பொருட்களை யார் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றால் எதிரி தான் எடுத்து ஆஜர் செய்தார். எடுத்து ஆஜர் செய்த சான்று பொருட்களின் உடைகளின் நிறம் என்ன என்றால் கருப்பு கலர் காலர் வைத்த டீசர்ட், மற்றும் சிவப்புகலர் வேஷ்டி ஆகும். கத்தி , வேஷ்டி, டீசரட் ஆகியவை ஒரு கவருக்குள் இருந்தது. கவர் என்ன நிறம் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அந்த கவர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும், அதனடிப்படையில் எந்தவிதமான சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும், நான்அரசு ஊழியர் என்பதால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்கள் இருந்த கவரில் இரத்தக்கறை படிந்திருந்ததா என்றால்

நான் அதனை சரியாக கவனிக்கவில்லை.

மறுவிசாரணை இல்லை.